## 6. அரசினர் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"சட்டமன்ற விதி 21(3)-ன் கீழ் "அரசினர் சட்ட முன்வடிவுகள்" என்ற தலைப்பில் 4-வது இனம் தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) 1-வது இனத்துக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டமன்ற விதி 21(3)-ன் கீழ் "அரசினர் சட்ட முன்வடிவுகள்" என்ற தலைப்பில் 4-வது இனம் தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) 1-வது இனத்துக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(2) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972).

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு, தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தொழிலாளர் தம் நலனையும் அவர்களைச் சார்ந்துள்ளோர் நலனை யும் ஊக்கி வளர்ப்பதற்காகத் தொழிலாளர் நல நிதி ஒன்றினை நிறுவுவதன் அவசியம் பலகாலும் உணரப்பட்டு வந்தது. இந்திய

@ 112–132 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.